One of such doubts is the question raised by Arjuna in Cha-Chapter VI, Sloka 33 & 34

*Yo yam yogastwaya proktassamyena madhusudana*
*Etasyaham na pasyami chanchalatwat sthithim sthiram—* sl 33

*Chanchalam hi manah krishna pramadhi balavaddhrudhm*
*Tasyaham nigraham manye vayoriva sudushkaram—* sl 34

Arjuna says that whatever Krishna expounded earlier namely the Yoga in the form of equanimity of mind is not perceivable to him owing to restlessness of his mind since the mind is very unsteady, turbulent, tenacious and powerful He further confesses that mind like wind, is very difficult to be controlled Lord Krishna agrees that the mind is no doubt unsteady and difficult to curb but it can be controlled through practice or abhyasa and dispassion or vairagya

Asamsayam mahabaho mano duringraham chalam
Abhyasena tu kaunteya vairagyena cha gruhyate-Ch VI, sl 35

*Vairagya is not an unintelligent suppression of one's desires but is a positive and enlightened dispassion one develops towards everything that is ephemeral* It is not an act of suppressing the mind involving a danger of its indulgence at an unguarded moment but it is a process of educating the mind to discern for itself the real from the unreal values so that it automatically turns away from the unreal. Actually, vairagya in its ultimate sense is very

difficult to achieve but nevertheless one can develop an attitude of vairagya in all acts to start with If one does not have any sense of involvement in all the pairs of opposites like *Sukha ? Dukha, Jaya ? Apajaya, Labha ? Nashta,* one will not have any regrets of the past and hopes for the futrue and such a vairagi lives only in the present and accepts as Lord's Prasad whatever result accrues for his action Well then-this requires educating the mind-a mind which is turbulent and unsteady. How can this be achieved by a commoner attending to his normal chores?

It is told that the flow of thought current constitutes the mind If so, it is clear that the mind is projected outwards by the quality of thoughts, quantity of thouhgts and the direction of thoughts It is therefore essential to control all these three aspects to control the mind The quantity of thoughts can be limited to the present by living only in the present, and keeping the mind where the body is, instead of allowing it a free play outside. In such a case, all the organs of the body are deeply engrossed in performing 'Swadharma' and association of mind with such a work is verily worship The quality or nature and the direction of thoughts can be controlled by eliminating the sense of doer ship in all work and witnessing a play of the Lord in all our work After accomplishing the quantum of committed work in a spirit of worship, the same direction can be maintained by engaging the mind in acts of formal worship A large number of people cannot appreciate the prayers and other ritualistic acts and sometimes even redicule others doing them. They cannot understand the wisdom in the advice-Begin the day with a prayer and end the day with a prayer The Indian way of life has been symbolised from several generations with keeping the house clean and worshipping God in several forms and shapes. The westerners simply state that cleanliness is godliness whilst in this country, any act of worship is preceeded by overall cleaning first. The time spent in these preliminaries like cleaning the place, decorating it, getting, flowers, incence etc required for worship, installing an idol symbolic of God is not idle man's work and therefore unnecessary but during this time and through these acts, the mind is slowly and steadily conditioned to the final act of worship by prayers. As such, the thoughts are channelised in the proper direction and not allowed to go astray so that the prayers with such a controlled and steady mind will become

meaningful and absorbing but not mere formal recitation of a routine formality.

In Bhagawadgita Ch VI Slokas 11 to 17 indicate certain suggestions for controlling the mind The sitting place and posture conducive to concentration of the mind were mentioned. These suggestions are indicative but not imperative What is more important to grasp is that a little bit of pre-conditioning of the mind is very much essentail to achieve the desired purpose in a prayer


Offering of prayers to a God visualised in a particular form and shape is indicated in Kaivalyopanishad also This is the art of seeing Limitless through a limited Even though God is *achintya, avyakta, and anantarupa* still Bhagawan Brahma in this upanishad suggests to Aswalayana a definite form and shape to god for easy meditation.

Umasahayam parameswaram prabhum
Trilochanam neelakantam prasantham
Dhyatwa munirgachchati bhutayonim
Samastha sakshim tamasah parasthath

In more recent contemporary past, Bhagawan Ramana Maharshi in his upadesasaram indicated physical, vocal and mental worship

Kaya Vaangmanah karyamuthamam
Pujanam japah chintanam kramath

Puja or worship of God in some form or other-may He be Rama or Krishna, Vishnu or Mahaswara, Venkateswara or Narasimha, Lakshmi or Saraswati- is so much blended with Indian life that it has become synonymous of our cultural heritage. It is needless to question the validity or the efficacy of prayers in bringing about concentration of mind which is so very essential for any contemplation to achieve self-realisation Constant practice is very essential for realising how potent the prayers are but unfortunately it is this *small* time in a *big* day that gets usurped under the pretext of some useless and meaning less other occupation Let us not forget it and postpone it just like we don't forget to breathe however heavy the engagements may be. May the blessings of Lord Venkateswara be on everyone of us to lead us on the correct path.




# ஸப்தகிரி

லா 2] ஆகஸ்டடு [இதழ்: 3

ஆசிரியா்

எம. சநதிரமௌளி ரெட்டி,
எம். ஏ., ஐ. ஏ. எஸ்.
எக்ஸிகயூடிவ ஆபிஸா,
திருமலை திருபபதி தேவஸதானம,
திருபபதி.

★


ஆணடு சநதா ரூ 3/—
தனி பிரதி 25 பை

★

மாத இதழுககும, மறறும்
இதர விபரங்களுக்கும்

ஆசிரியா,
திருமலை திருபபதி தேவஸ்தானம,
திருபபதி.

# பொருள் அடக்கம்







# ஆசிரியர் உரை

★ ★ ★

பாலாஜி எகஸபிரஸஸை தின சரி வண்டியாக செய்த ரயிலவே நிலேயத்தினர்களுககு எங்களது மனமார்நத நன்றியைத் தெரிவித்துக கொள்கிருேம. ஹைதராபாத்திலிருந்து திருப்பதிககு செல்லும் ஒரு ஸ்லீப்பா கோசசும (Sleeping coach) அறிமுக படுத்தப்படடுள்ளது பாலாஜீ எக்ஸ்பிரஸ மதருஸிறகு 4-30 மணி நேரத்தில் எட்டு இடங்களில் நின்று இரவு வெகுநேரம கழித்து வருவதால் அது பிரயாணிகளை சாபபாடு முதலிய வஸதிகளுககு மிகவும் அவதிபபட வைககிறது. திருப்பதியிலிருந்து ஸ்லீபபர் கோச்சில் செல்ல எண்ணும் பிரயாணிகளுக்கு இது உபயோகப்படாது. ஏனெனில் இந்த ஸ்லீபபர் கோச் ரேணிகுணடாவிலிருந்து தான் புறப்படுகிறது இதைப போலவே ரெய்ச்சூரிலிருநது ரேணிகுண்டாவிற்கு வரும் பாஸஞ்சர் வணடி நடு இரவில் ரேணிகுண்டாவிற்கு வநது சேருகிறது. அதனுல் பிரயாணிகள் ஓர் வசதியும் இனறி சுமார் 3-மணி நேரம் பிளாட்பாரததில் இருககவேணடி வருகிறது. இந்த அசௌகரியங்களைக் குறிப்பிட்டு நாங்கள் விரும்புவது எனன வென்றல எல்லா புணணிய ஸதலங்கள், குறிப்பாக திருப்பதிக்கு இபபொழுது உள்ள ஸௌகரியங்களை விட அதிக ஸௌகரியங்கள செயது கொடுகக வேண்டும் எனபதே ஆகும்.

இந்த ஸநதாப்பததை பயன் படுத்திக் கொணடு நாங்கள சில யோசனைகளை ரெயில்வே நிலேயத்திரேர்களுககு அளிககிருேம ரேணிகுண்டாவிலேயே நின்று விடும் எல்லா வணடிகளும் திருப்பதி வரையில் வரவேண்டும். அவ்வாறே ரேணிகுண்டாவிலிருந்து புறப்படும் எல்லா வணடிகளும், திருப்பதியிலிருநது போகவேண்டும். இப்போது இருக்கிற மதருஸ்-திருப்பதி எக்ஸ்பிரஸ், மதருஸிற்கு இரவு 8-30 மணிக்கு வநது சேரும்படி நேரத்தை மாற்றவேண்டும். திருப்பதிக்கும், ரெய்ச்சூருக்கும் இடையே ஒரு வண்டியை அமைக்கவேண்டும் திருப்பதி கூடூர் நடுவில் இருக்கும் ரெயில் வஸதிகள் மிகவும் குறைவாக உள்ளது. இநத வழியில் குறைந்த பக்ஷம் இரணடு ரெயில்கார்களையாவது அமைப்பது மிகவும் அவசியம். திருப்பதி-வால்டேருக்கு குணடூர் வழியாக ஒரு

எகஸபிரஸஸை நடததவேண்டும என்று ஏற்கனவே நாங்கள வேண்டுகோள விடுத்துள ளோம மீட்டா கேஜ் மேல இரண்டு வண்டிகளைத் தவிர அதிக தூரம் செல்லும ரயில கள் இல்லை ஆகவே ரேணிகுண்டா — திருச்சிருப்பளளி பாஸட் பாஸஞ்சரை (Fast Passenger) ராமேஸ்வரம வரை செல்லும எக்ஸபிரஸ்ஸாகவும், ரேணிகுணடாவிலிருந்து பெஙக ளுருக்கு, பாகாலா, தர்மா வரம் வழியாக ஓர் எக்ஸ்பிரஸ ஸும், காட்பாடி ரேணிகுணடா விளிடையே ரெயில்கார்களின போக்குவரத்து-ஆகிய யோசனை களை அமுலுக்குக கொண்டுவர ரெயில்வே அங்கத்தினர் முயறசி செயயவேணடும் மேறகூறிய யோசனைகளை ரயில்வே நிலையத் தினர் பரிசீலிதது அமுலுககுக் கொணடு வநதால யாத்திரை ஸ்தலமாக பிரஸிதது பெற்ற இந்த திருப்பதி மூன்று நாடு களுடன நோஉறவு கொண்டு யாததிரிகாகளுககு இன்னும நனருகப் பணிபுரியும்

இபபடிச் செயவதால யாத திரிகர்களுக்கு அதிக பயன் இல லாத போதிலும், யாத்திரிகா களுக்கு யாத்திரையின போது ஏறபடும இன்னல்களை ஒரளவு குறைபபதறகு நாங்கள் எங்க ளால முடிந்ததை செய்வதே ஆகும்.



## கவனிக்கவும்

மணியாடர் கூபனில் (Money Orders) சந்தா தொகை அனுபபுமபோது, சந்தா நெம்பரை குறித்து அனுப்பவும. சநதாதாராகள் தங்களுடைய நம்பரை தேவஸதான மாத வெளியீடு உறையில (Cover) கவனிககவும்.

## செய்தி சுருக்கம்

### பவித்ரோத்ஸவம்

இப்பத்திரிகை வாசகர்களுக்கு சேரும் முனபே வேங்கடேசப் பெருமானின் பவித்ரோத்ஸவம் முடிநது விட்டிருக்கும். பிரம்மோத்ஸவம் போல் முக்கியத்வம் கொண்ட இந்த பவித்ரோதஸவம் 2-8-71 அன்று அங்குரார்ப்பணத்துடன் தொடங்கி 3-8-71 லிருநது 5-8-71 வரை நடைபெறும்,

இந்த மூன்று நாட்களும் உத்ஸவமூர்த்தி தன உபயநாச்சிமாரகளுடன் கோவில் கல்யாண மண்டபத்திலிருக்கும் யாகசாலையில் பூர்ணஹுதியுடன் உற்சவம் முடியும்வரை அங்கேயே எழுந்தருளியிருப்பார்கள். இந்த மூன்று நாட்களும் ஹோமங்களும், பூஜைகளும் நடைபெறும.

முதல்நாள் (3-8-71) அனறு பரிசுத்தமான நூலிலோ அலலது பட்டிலோ, துளசி அலலது தாமரை மணியைப் போல் காணபபடும் ஓர் மாலையைச் செய்வார்கள். இதுதான் பவிதரம். அதை யாகசாலையில் வைபபார்கள். இரண்டாவது நாள் அந்த பவித்ரங்களை மூல(வா) ஸதானத்திலிருந்து பேடி ஆஞ்சநேயஸ்வாமி சன்னிதிவரை இருக்கும் எல்லா முக்கிய, பரிவார தெய்வங்களுக்கும் பவித்ரங்களைச் சாத்துவார்கள், மூன்றுவது நாள் பவித்ரங்களை களைததபின் (பவித்ர விஸர்ஜனத்திற்குப்பின்) பூர்ணஹுதியுடன் இந்த உற்சவம் பூர்த்தியாகும். பவித்ரோத்ஸவத்தின்போது பணம் கட்டி நடத்தப்படும் எந்த சேவையும் நடைபெறுது. மற்றும் ரூ. 1500 கட்டணம் செலுத்திய கிருஹஸ்தர்களுக்கு மட்டும உத்ஸவத்தில் பங்கு கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

இந்தப் பவித்ரோத்ஸவம் சாலிசகம் 1385 ஆணடில் தொடங்கி, பின்பு 1962-ம் ஆண்டு மறுபடியும் தொடங்கப்பட்டது.

இந்த பவித்ரோத்ஸவத்ஸத நடத்தாவிடில நாட்டிற்குக் கெடுதல் விளையக்கூடும் என நம்பபப்படுகிறது.

## ராமாயண கதா காலக்ஷேபம்

8-7-71 அன்று, நம்மாள்வார் கோவிலில் வேங்கடேஸ்வர தர்ம பிரசார சபையின் ஆதரவில் கல்லூரி வீர பத்ர சாஸ்த்திரி அவர்கள் ராமாயண கதா காலக்ஷேபத்தை ஆரம்பித்தார். ஸ்ரீ. டி. கெ. வி. என். சுதாசனாச்சாரியார் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

★ ★ ★ ★ ★

## பீமாவரத்தில் வேங்கடேச சுப்ரபாத போட்டி

பீமாவரத்திலிருக்கும் (ஆ. பி.) தி. தி. தேவஸ்தான சமாசார அறிவிப்பு நிலையத்தில வருடாந்தர வேங்கடேச சுப்ரபாத போட்டி நடைபெற்றது. 13-6-71 அன்று வெற்றியடைந்தோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தி. தி. தேவஸ்தான போர்டின் தலைவரான ஸ்ரீ. ரங்கராஜு அவர்களும் இதில் கலந்து கொண்டார். பிரசித்த ஸங்கீத வித்வான் ஸ்ரீ. பாலமுரளீ கிருஷ்ணா அவர்கள் பரிசுகளை வழங்கினார். பட்டணத்தில் உள்ள பிரமுகர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டனர்

★ ★ ★ ★ ★

## ஆந்திர ஆச்ரமம்

அதிகமாக பொழியும் பனியினாலும் நதிகளின் வெள்ளங்களினாலும், உத்திர பிரதேச அரசின் எச்சரிகையினாலும் கேதாரிநாத், பத்ரீநாத், பெருமாள்களை தரிசிக்க வரும் பக்தர்களின் வருகையை தவிற்க முடியவில்லை. ரிஷீகேஷில் இருக்கும் தி. தி. தேவஸ்தான சமாசார விசாரணை அறிவிப்பு நிலையம் மிக உற்சாகத்துடன பக்தர்களுக்குப் பணிபுரிதந்து. ஜூன் மாதத்தில் ஆந்திர ஆஸ்ரமத்திற்கு 3025 பக்தாகள் வந்து, ஆஸ்ரமத்தை நடத்துவதற்காக ரூ. 3604 நனகொடை கொடுத்தார்கள். போன வருடம் இதே மாதத்தில் 2517 பக்தர்களிடமிருந்து ரூ. 1487-50 தான் வசூல் ஆகியது. போன வருடம் (1970) முதல் ஆறு மாதங்களில் வசூல் ஆகிய தொகை 3399 ரூபாய் தான். ஆனால் இந்த வருடம் (1971) முதல ஆறு மாதங்களில் வசூல்ஆன தொகை ரூ. 8025-50 ஆகும்.

★ ★ ★ ★ ★

# " திருவித்துவக்கோட்டு அம்மான் "

டாக்டர் ந சுப்பு ரெட்டியார்,
தமிழ்ப் பேராசிரியர்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.

★ ★ ★

பக்தி உழவன

பயிர்த்தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் பெரும்பாலும பயிர்த்தலையிலேயே சிறுகுடில் அமைத்து அதில் குடியிருந்து கொண்டு அப்பயிரைத் தம் உயிர்போல் புரப்பது வழக்கம். இஃதுதான் உண்மையாக உழவுத் தொழிலில ஈடுபடுவர்களின அறிகுறியாகும. இது கருதிதான வள்ளுவப் பெருந்தகை,

" செல்லான கிழவன்
இருபபின் நிலம்புலந்து
இலலாளின் ஊடி விடும். "[1]

என்று சொல்லி வைததனர் போலும, உழவுத் தொழிலே பெரும்பானமையாக நடைபெறும நம் நாட்டில் பொதுவாக உழவர்கள் நிலத்தின் தலைமாட்டிலேயே குடிலை அமைத்துக் கொண்டு வாழ்வதைக் காணலாமாயினும், மலை நாட்டில் (கேரளத்தில்) இந்நிலையைச் சிறப்பாகக் காணலாம். நீர்வளம், நிலவளம் மிக்க அந்நாட்டில மக்கள் தொகைக்கேறப நிலப்பரபபு அமையவில்லை. ஒரு சில பெருநிலக் கிழவர்களைத் தவிர, பெரும்பாலோருககுச் சிறுசிறு பகுதிகளே சொந்த நில மாக அமைந்துள்ளன. இந்தச் சிறுபகுதியாக உள்ள 'காணி நிலத்திலே'[2] 'தூணில் அழகினதாய் . ஓர் மாளிகை', 'பத்துப்பனனிரண்டு தெனனைமரங்கள்', பாக்குமரங்கள், பலா மரங்கள் முதலியவையும், பல்வேறுவகைப் பயிாதொழிலகளும நாம் நாடோறும் காணும் காட்சிகளாகும. பெரும்பாலும்

---

1. குறள - 1039.
2. பாரதியாா கவிதைகள் - காணிநிலம 1 2

வீடுகள் அமையாத நிலங்களை அங்குக் காண்டல அரிது அவ்வளவு கண்ணுங் கருத்துமாக அங்கு 'உழவு' நடை பெற்று வருகின்றது

இங்ஙனமே திருமகள் கேள்வனை பரமபதநாதன் தனக்கு அடிமைசெய்து உய்தற்காகவே பிறநத ஆன்மாக்களையெல்லாம் ஆட்கொண்டு உய்விக்கும்பொருட்டுப் பெருங்கருணையால் பயிர்த்தலையிலே குடில் அமைத்துக்கொண்டு பயிர்களைப் புரக்கும் உழவனைப் போலவே இந்நில உலகத்தில் 108 திவ்விய தேசங்களில் திருககோயில் கொண்டு எழுநதருளியிருந்து ஆன்மாக்களை உய்விககின்ருன என்பது வைணவ உலகின் நம்பிக்கை. இங்ஙனம ஆனமப் பயிர்களைப் புரககும் எம்பெருமானுக்குப் 'பக்தி உழவன்' என்று திருநாமம் இட்டு மகிழ்வர் பக்திசாரர் என்ற திருமழிசைப்பிரான்.

'' வித்தும் இடவேண்டும்
கொலலோ விடைஅடர்த்த
பதறி உழவன்
பழம்புனதது ''[3]

என்று கூறுவதைக் காணமின். இந்த 108 திருப்பதிகளுள் மலைநாட்டிலுள்ளவை மட்டிலும் பதின்மூன்று இந்தப் பதினமூன்று திவ்விய தேசங்களும் நீர்வளம் நிலவளம் நிறைந்த இடங்களில் அமைந்து ''மாயோன் மேய காடுறை உலகமாகத்''[4] திகழ்கின்றன. கேரளத்தில் திவ்விய தேச யாத்திரை செய்யும் பக்தர்கள் இந்தத் தனிச் சிறப்பை நன்கு அறிவர்.

**திருவித்துக்கோடு — சீவான்மாவின் நாட்டம்:**

இங்ஙனம் 108 திவ்விய தேசஙகளிலும் எழுநதருளியிருக்கும் எம்பெருமான்களுள மூவர் பேரில் மிகவும் ஈடுபட்டு மங்களாசாசனம் செய்துள்ளார் கோழிக்கோன் குலசேகரப் பெருமாள். திருவரங்கம் பெரிய கோயிலில் அரவணையில் பள்ளிகொண்டுள்ள

3. நான்முகன் திருவநதாதி - 27.
4. தொல், பொருள் - அகத்திணையியல் - 5.

அழகிய மணவாளன் பேரில் மால கொண்டு பாடியவை முதல் மூன்று திருமொழிகள்; வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து நெடியோன் பேரில் அருளியது நான்காவது திருமொழி. மூன்றாவ தாகக் குறிப்பிட்ட 'வித்துவக கோடு' என்ற திவ்விய தேசம் மலையாள நாட்டிலுள்ளது. இதனைத் 'திருமிற்றக் கோடு' என்று வழங்குவர் அப்பகுதி மக்கள். தென்னிநதிய இருபபுப் பாதையின ஷோரனூர் சந்திப்பிலிருநது இவவூருக்கு எளிதாகப் போகலாம். ஷோரனூர் - குருவாயூர் நெடுஞ்சாலையில் ஷோர னூரிலிருந்து பத்துக்கல தொலைவிலுள்ளது இத்திருப்பதி. அடிக்கடி பேருந்து வசதி உண்டு. ஐம்பது காசு தநது இவ்வூரை அடையலாம்; சாலையின் மேலேயே இவ்வூர் அமைந்துள்ளது.

பேருந்தில் செலபவர்கள் திருமலைக்குப பேருந்தில் செல-லும் பயணிகள் கொணடை ஊசி வளைவுப் பாதையில் செல்லும் பொழுது மலையின் இயறகைக காட்சிகளை நுகர்ந்த வண்ணம் செல்வதைப் போலவே, ஷோரனூருக்கும் வித்துவக் கோட்டிற் கும் இடையிலுள்ள ஒரு பெருங்குன்றினை இத்தகைய வளைவுப் பாதையில் கடந்து செல்லுங்கால் மலையின் இயற்கைக் காடசி யில் தோய்ந்த வண்ணம் செல்லலாம். எங்கோ பிறந்து எப்படி எப்படியெல்லாம் வளர்நத பாரதப்புழா என்ற ஆறு வளைந்து வளைநது சென்று வித்துவக்கோட்டு அம்மானை நாடி அவன் திரு வடிகளை வருடிச் செல்லும் அற்புதக் காட்சிகளைக் கணடு களிக்க லாம். அப்போதெல்லாம் 'அர்ச்சிராதி கதி' யில் செல்லும் ஆன்மாவின் பயணம் நம் சிநதையில் எழுநத வண்ணமிருக்கும். நாம் மலைப் பாதையில் வளைந்து வளைந்து செல்லும் போதெல் லாம் வளைந்து வளைந்து செல்லும் ஆற்றையும் பலமுறை கண்டு அநுபவிக்கலாம். இங்ஙனம் செல்லுங்கால் சில சமயம் நாம் ஆற்றைத் தொடர்ந்து செலவதுபோல் காணப்படுவோம்; சில சமயம் ஆறு நம்மைத் தொடர்ந்து வருவதுபோல் தென்படும். மலைப்பாதையில் சென்று கொண்டிருக்கும்பொழுது,

"தெளிதுஆக உள்ளத்தைச்
செந்நெறீஇ ஞானத்து
எளிதுஆக நன்குஉணர்வார்
- சிந்தை எளிதுஆகத்

தாயநாடு கன்றேபோல
தணதுழா யானஅடிக்கே
போயநாடிக கொள்ளும் புரிந்து. ''[5]

(செந்நெறி - செவ்வனே நிறுத்தி, ஞானம - பகவதவிஷயபக்தி, சிந்தை - மனம: புரிந்து - விரும்பி.)

ன்ற பொய்கையாழ்வாரின் வாககு பண்பட்ட நம உள்ளத்தில் மிழியிட்டு எழலாம. பல்லாயிரம பசுத்திரளினுள ஒரு சிறிய ன்று தன் தாயைக் கண்டறிந்து ஆவலுடன அதனை அடைவது பாலவே, பரமான்மா - சீவான்மா உறவினை நன்கறிந்த நம் னம் பதறிக் கொண்டு அவ்வெம்பெருமானையே எண்ணிய ண்ணம் மிக்க ஆவலுடன் செல்லும் உணர்ச்சியைப் பெறு தைக் காணலாம். அல்லது, இன்னொரு வழியாகவும் இவ் றரை அடையலாம. ஷொரனூர - கோழிக்கோடு இருப்புப் ாதையிலுள்ள பட்டாமபி என்ற நிலையத்தில் (ஷொரனூரி ருந்து மூன்றுவது நிலையம்) இறங்கி, ஆற்றில் வெள்ளம இருப் ின், படகின மூலம அதனைக் கடந்து கோயிலின் படித்துறை லேயே இறங்கலாம.

(தொடரும்)

---

5. முதல் திருவந்தாதி - 30.



# பவித்ரோத்ஸவம்

—குமாரி இ. ஸி. புஷ்பவல

பவித்ரோத்ஸவமாவது — தேவாலயங்களில தினந்தோறும் ுல்லது அவ்வப்போது நடைபெறும கைங்கர்யங்களில் ுறிந்தோ, அறியாமலோ ஏற்படும ஏற்றத்தாழ்வுகளுக்கு ாஸ்திரம் விதித்ததென்று நிச்சயிக்கப்பட்ட — பிராயச்சித்த மென்று சொல்லலாம். இவ்வுத்ஸவம் வைகாநஸ சாஸ்திரத்தி ும் மற்ற சைவ வைஷ்ணவாகம் புராண ஸ்ம்ருதிகளிலும் திக்கப்பட்டதாய்ப் பெரியோர்களால் பரம்பரையாக அநுஷ் ்க்கப்பட்டும் வருகின்றது

இது வருடத்திற்கு ஒரு முறை செய்யப்படுவதாக விதிககப் ட்டுள்ளது. ஆஷாடம், ச்ராவணம், பாத்ரபதம் என்னும் ாந்த்ரமான ரீதியுலாவது ஆவணி, புரட்டாசி, ஐபபசி என் வும் ஸௌரமான ரீதியிலாவது சுக்லபக்ஷத்வாதசியில் இதைச் செய்யவேண்டும. பௌர்ணமி அமாவாஸ்யை ச்ரவணம சுகல ருஷ்ணைகாதசிகள்-இவற்றில் செய்யவேணடுமென்று சிலர்கூறு ர். அதிக மாஸம, க்ஷயமாஸம், சூந்யதிதி வார நக்ஷத்திரங் ள் இன்னொரு திதியோடு கலநத த்வாதசி இவைகள் இதற்கு ்யயோகப்படமாட்டா. மற்ற நிஷித்த காலங்களும உதவா ுரசர் ஆணையிட்டால் காலவரையறை யின்றி எபபோதாவதுச் செய்யலாம். இப்பவித்ரோத்ஸவம் செயவதால் ஸமஸ்த யாகங் ளும் செய்தால் உண்டாகும் பயன்கள் உண்டாகும. ஸம்ஸ்த தாஷங்களும் நீங்கும். அவரவர் விரும்பிய பயனெலலாம் கிடைக்கும் ஸந்தோஷம் உணடாகும். இவ்வுலகிலும லோகாந் ரங்களிலும் சாநதி கைகூடும். பூஜைகளில் மநதிரம் தந்திரம் ரவ்யம் இவற்றின் குறைவினுல் உணடாகும் தோஷமெல்லாம் ணியும். இவ்வுத்ஸவம் செய்யாவிடில் அசுபம் நீங்கிச் சுபம் ண்டாகாததோடு மட்டும் அலலாமல், செய்த பூஜை எல்லாம் யனற்றதாகிவிடும். அரசருககும் குடிகளுக்கும் அநர்த்தமும் நேரிடும்.

திருமலையில் பவித்ரோத்ஸவம் சாந்த்ரமான முறைபபடியே ச்ராவணமாஸ சுக்லபக்ஷ தசமியன்று இரவு அங்குராபபணத் துடன் ஆரம்பிக்கப்பட்டு, இரண்டாம் நாளிரவு பவித்ரப்ர திஷ்டை, மூன்றும் நாள் காலை பவித்ரம ஸமர்ப்பித்தல், நான் ாம் நாளிரவு பூர்ணுஹுதி, ஐந்தாம் நாள் காலை தோமால ஸேவையின்போது பவித்ரம் களைதல் என்றிவ்விதமாக நடத்தப் படுகிறது.



ஸ்னபன திருமஞ்ஜனம் (ஸஹஸ்ரதாராபிஷேகம்)

தசமி தினத்தன்று பகலில நிதய கைங்கர்யம் முடிந்து மாலைபபூஜை நடந்து ஸ்ரீஸேனை முதலியார் வீதிவலமாகப் புறப் பட்டு வஸந்த மண்டபத்தில் எழுநதருளி ம்ருத் ஸங்க்ரஹணம் (மண எடுத்துக் கொள்ளுதல்) நடந்தபிறகு கோவிலுக்கு எழுந் தருளி, பவித்ரோத்ஸவததிற்காக விமான பரதக்ஷிணத்திலுள்ள கல்யாண மணடபததில் ஏற்படுத்தப்பட்ட யாகசாலையில் அங்கு ரார்ப்பணம் நடந்த பின்பு இரவு கைங்கர்யம் முடிக்கப்பட்டு ஸந்நிதியில் தீர்மானம் ஆகும்.

மறுநாள் ஏகாதசியன்று காலைக் கைங்கர்யங்கள் அனைத்தும் முடிந்தபின்பு, உபயநாச்சியார்களுடன் ஸ்ரீமலையப்பஸ்வாமி என்னும் உத்ஸவமூர்ததிக்கு யாகசாலையில் அலங்காரத் திரு மஞ்சனமும், பவிதரோத்ஸவத்திற்காக 1500 ரூபாய் கட்டணம் செலுத்திய க்ருஹஸ்தர்களால் செயவிக்கப்படும் தத்தமும், யாகசாலையலங்காரமும் நடத்தப்பட்டு பகற்கைங்கர்யம் முடிக்கப்படும.

யாகசாலையில் அகல்மஷஹோமம் முதலிய காரியங்கள், உபயநாச்சியார்களுடன் ஸ்ரீமலையப்பஸ்வாமிக்கு விசேஷமாகத் திருவாபரணம் சாத்தித் தங்கத் திருச்சியில் திருவீதியுத்ஸவம் முடிந்து மறுபடியும கோவிலுக்கு எழுந்தருளுவித்தல், ராத்ரி

தோமாலஸேவைமணி, திருவீஸம்மணி, ஏகாந்தஸேவை இவைகள் நடைபெறும். யாகசாலையில் ப்ரதான கலசத்தை ஸ்தாபித்தலும். ஸுதர்சன மண்டலத்தை அலங்கரித்தலும் மாலை வேளையிலேயே செய்யப்பட்டு, இரவு பஞ்சாகநிப்ரணயனம், ஔபாஸநாக்நியில் அதிவாஸஹோமம, பவித்ரப்ரதிஷ்டை, கும்பாவாஹனம், நிவேதனம், பவித்ரங்களுக்கு ரக்ஷாபந்தனம், சயனம், ஹௌத்ர ப்ரசம்ஸநம், முற்கூறிய ஹோமங்களின் பூர்ணாஹுதி என்றிவை நடத்தப்படும்.

த்வாதசியன்று காலை நித்ய கைங்கர்யம் முடிவுபெற்று, இரவு சயனாதிவாஸத்தில் பவித்ரங்களை எடுத்துக் கொண்டு விமான ப்ரதக்ஷிணமாகக் குடை, சாமரம் முதலிய எல்லா மரியாதைகளுடனும், மூலஸ்தானம் தொடங்கி பேடி ஆஞ்சனேய ஸ்வாமியின் ஸந்நிதி வரையில் உள்ள எல்லா முக்கிய - பரிவார தேவதைகளுக்கும் பவித்ரங்களைச் சாத்தி, முன்தினத்தில் செய்தபடியே பகல் - இரவு கைங்கர்யங்கள் நடத்தப்படும்.

மறுநாள் காலை - பகல் - மாலை வேளைகளில் முதலிரண்டு நாட்களில்போல் கைங்கர்யங்கள் நடந்து இரவு எல்லா அக்நி குண்டங்களிலும் பூர்ணாஹுதியாகி க்ரது(யாகம்) முடிவுபெறும்.

பவித்ரோத்ஸவ உபயத்திற்காகக் கட்டணம் செலுத்திய க்ருஹஸ்தர்களுக்கு, பெருமாள் வீதிப்புறப்பாட்டில் வெள்ளித் தடிகளைக் கொடுத்துப் பெருமாளுடன் வரச்செய்து, ப்ரஸாத வஸ்த்ரபஹுமானங்கள் செய்யப்படும்.

பவித்ரோத்ஸவத்தின் போது ஹோமம் முதலியவற்ருேடு கவனித்தற்கு உரியது - பவித்திரங்களை அமைத்த அமைப்பு பவித்ரம் என்ருல் குற்றமற்ற நூலினுல் அல்லது நல்ல பட்டினுல் சாஸ்திரத்தில் கூறிய பருமனுடன் நீளமாகச் செய்யப்பட்ட கயிறுபோன்ற மாலையில் நடுநடுவில் மெல்லிய நூல் அல்லது பட்டினுல் மணிகள்போல் தென்படுமாறு கட்டப்பட்ட ஒற்றை மாலை என்னலாம் இவ்வகையான மாலை துளஸிமணிமாலை அல்லது தாமரைமணிமாலைபோல் காணப்படும். இதுதான் பவித்ரம். இப்பவித்ரங்கள் தேவவிக்ரஹங்களின உயரம பருமனுகிய அளவுக்குத் தக்கவாறு அமைநதிருக்கவேண்டும். கழுத்து



கனை _சிங்ள் நமபமே பாடு யருகை.

முதல் திருவடிவரை, முழநதாள்வரை, துடைவரை, இடுபபு வரை, நாபிவரை, கழுததுக்கும், திருமுடிக்கும், சங்கு சககரங் களுககும, இப்பவித்ரஙகள சாததப்படும். பவித்ரங்களில் மந்த்ரசக்தி ஏற்றப்பெற்றும அவை பெருமாள் திருமேனியில சாத்தப் பெற்றும் முற்கூறிய பலன்களைக் கொடுக்கும்.

பவித்ரஙகளைத் தங்கததிருல் செய்வது உயர்ந்த பக்ஷ மெனறு சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது ஒன்பது நாட்.களில பவிதரோத்ஸவம் செய்வது உயர்ந்ததாகக் கூறப்படுகின்றது.

ஸ்ரீ ஸாலுவ எர்ரகம்பயதேவ மகாராஜரின் குமாரரான ஸ்ரீமந மகா மண்டலேச்வர மதினி மிச்ர கண்ட கட்டாரி ஸாலுவ மல்லய தேவ மகாராஜரவர்கள் சா லிசகம் 1385-ம் ஆண்டுக்குச் சரியான ஸுபாநுவருஷம் தைமாதம் சுகலபக்ஷ தசமி ரோஹிணி களுடன் கூடிய திங்கட்கிழமையன்று திருமலைப் பெருமாளு டைய ஐந்து நாள் பவித்ரோத்ஸவத்திற்கு உபயம் வைத்த தாகச் சிலாசாஸனம் தெரிவிககிறது. பின்பு அது எத்தனை நாட்கள் நடநததோ எப்போது நின்று போயிற்ரோ தெரிய வில்லை. கி. பி. 1962-ம் ஆண்டில் மறுபடியும் ஆரம்பிக்கப் பட்டு அன்றுமுதல் மிகவும் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றது.

பவித்ரோத்ஸவ ஸமயமும் பகவானுக்கு ஒரு தீக்ஷாகாலம் என்று பெரியோர் கூறுகின்றனர். ஆகையால் இவ்வுத்ஸவ காலங்களில் உத்ஸவமூர்த்திகள் யாகசாலையிலேயே எழுந்தருளி யிருந்து ரக்ஷாபந்தனம் செய்விக்கப்பட்டு தீக்ஷையில் இருப்பார்கள். பூர்ணாஹுதியன்று இரவுதான் மறுபடியும் மூலஸ்தானம் எழுந்தருள்வார்கள் இந்நாட்களில் கல்யாணோத்ஸவம் வஸந்தோத்ஸவம் முதலியவைகளும் கருடஸேவை முதலிய வாகனங்களும் நடத்தப்படமாட்டா.

உத்ஸவங்களை நித்தியம், நைமித்திகம், காம்யம் - என்று மூன்று விதங்களாக கணிக்கலாம் பவித்ரோத்ஸவத்தை ஒவ்வொரு ஆண்டும் ஆசரித்து வருவதனால் நித்யமென்றும், ஸர்வ தோஷத்தையும் போக்குவதற்காக ஆசரிப்பதனால் நைமித்திகம் என்றும் சொல்லலாம். ஆனால் இது நைமித்திகத்தில் சேர்க்கப்படவில்லை. தோஷ சாந்திக்காக நடத்தப்படுவதால் இதை சாந்தி உத்ஸவம் ஆகும் அதிலும் இதை சேர்க்கவில்லை. அதனால் இதின் காரிய கலாபங்களெல்லாம் நித்யோத்ஸவமான ப்ரம்மோத்ஸவத்தைப்போல் ஆசரிக்கப்பட்டு வருகிறது பிர்ம் மோத்ஸவத்தைப்போல பகவானின் சக்தி யாகசாலையிலேயே ஆவாகனம் செய்யப்பட்டு பூஜிக்கப்படுகிறது சாந்திப்ரகரணை சந்தர்ப்பங்களில் அந்த சக்தி மூலவரிடமிருந்து அப்படியே கும்பங்களில் ஆவாகனம் செய்யப்பட்டு யாகசாலைக்கு எடுத்து வரப் பூஜிக்கப்படுகிறது. இதுதான் இந்த உத்ஸவத்தில் இருக்கும் ரகஸியம்.

1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் தி. தி. தேவஸ்த்தானப் பத்திரிகையில் அச்சிடப்பட்ட 'பவித்ரோத்ஸவம்' (தெலுங்கில்) என்ற கட்டுரையின் தமிழாக்கம்.



# சந்தாதாரர்களுக்கு ஓர் விண்ணப்பம்

—⁂O⁂—

ஸப்தகிரி மாத இதழ சந்தா தாரரகளில் கீழே கொடுக்கப் பட்டுள்ள எணகளின் சந்தாகாலம் 30-9-71 வுடன் முடிவடை வதால் இவர்களின் சந்தா தொகையை விரைவாக அனுப்பா விடில் இவர்களுக்கு மாத இதழ் அனுப்புவது நிறுத்தப்படும். ஆகையால் சந்தாதாரர்கள இந்த விஷயத்தை கவனித்து தங்களுடைய சந்தா தொகையை விரைவாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

T96, T143; T153, T175; T233; T278, T301, T302, T303; T331, T333, T334; T343, T373; T375; T378; T432, T443, T451; T471, T474, T475: T477, T278, T479, T643, T644, T645, T647, T646, T648, T649; T655, T656· T658; T659, T673; T873, T875; T883, T1025, T1026, T1027, T1028; T1031, T1032, T1033, T1034, T1035, T1036; T1037, T1038; T1039; T1040, T1041, T1042, T1043, T1044, T1045, T1046, T1047, T1048, TI050, TI052, T1053, T1054, T1055, T1056, T1057, T1058, T1059, T1060, T1061, T1066, T1067, T1068, T1070, T1071, T1072, T1081, T1082, T1083, T1087, T1089, T1094, T1097, T1102, T1136, T1142, T110,

மேறகுறித்த எணகள் கொண்ட சந்தாதார்கள் 45 நாட் களுக்குள் சந்தாத் தொகையை செலுத்தாவிடில், அவர்களை சந்தாதார்களின் பட்டியிலிருநது நீக்கி, அவர்களின் எண்களை புதிய சந்தாதாரரகளுக்கு கொடுக்க நேரிடும்.

மாத இதழுக்கு சம்பநதப்பட்ட பணத்தை, மணியார்டர் மூலமாக, "ஆசிரியர், தி. தி தேவஸ்தானம, திருப்பதி. (A. P)" எனற முகவரிக்கு அனுப்பவே ணடும்.

செக் மூலமாகவோ, அல்லது தவறுதலான முகவரிக்கு அனுப்பும்படியான பணத்தைப் பற்றிய விபரங்களுக்கு இந்த அலுவலகம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது என்று அறிவிககப்படுகிறது.

ஆசிரியர்.



# "எண்ணும் திருநாமம்"

—: ஸ்ரீ. ர. வேங்கடரத்தினம, :—

——(*)——

கண்ணபிரானின் திருவடிகளைச் சென்றடையும் விருப்பம் நிறைந்தவர் தாம் அவருடைய அடியார் எவருமே அவர்கள் அனைவரும் உள்ளத்தில் போற்றிப் பணியும் திருநாமம் நாராயணனின் திருப்பெயரே ஆகும். இதில் எள்ளளவும் ஐயத்திற்கு இடம் இல்லை. கிருஷ்ண பகவானின் திருவடிகளின் மீது உள்ளத்தைப் பறி கொடுத்தோர், பின் நாராயண நாமமின்றி வேறெதனைச் சிந்தையில் போற்றுவர்? உறுதியுடன் அறைந்தாற்போல அடித்துக் கூறுபவா நம்மாழ்வார்.

"கண்ணான கழலிணை
நண்ணு மன முடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே"

திருவடிகளை அடைய வேண்டின், திருநாமம் ஓதுமின என்பது திருவாய் மொழி இங்கே தரும் சுருக்குவழி. திருத்தாள் இலட்சியம் அல்லது போயச சேர வேண்டிய இடம் — இலக்கு எனில், திருப்பேர் வழியாக அமைவது. போ சொல்லிப் போய்ச் சேரலாம் என்பது குறிப்பு.

இந்நாம உபாசனையினை ஆழ்வார்களின் பாசுரங்களில் காணலாம்.

"சொல்லும் தனையும் தொழுமின் விழும் உடமபு
சொல்லுந்தனையும் திருமாலை — நல் இதழ்த்
தாமத்தால வேளவியால தந்திரத்தால் மநதிரததால
நாமத்தால ஏத்துதிரேல் நன்று" —முதல்திருஅந்தாதி

இவ்வெணபாவில் ஒரு விசேஷம் நாமம் நவில்வதற்கே வழிகள் பல கூறப்பட்டுளளமை ஆகும். உடலம் சடலமாகும் முன்னரே, திருமாலை அவர் திருநாமம் செப்பி வழிபடுவீராக. தாமம்= பூமாலை, எனவே பெயர் சொல்லி, மலர்மாலை சாத்தி அர்ச்சனை

புரியலாம். யாகம், மந்திரம், தந்திரம் எனும் முறைகளிலும் நாமம் நவிலலாம் எனவே, தாளை அடைய நாமம ஒரு வழி யெனில், நாமம் சொல்லவே இங்கு நான்கு வழிகள்.

இரண்டாம் திருவந்தாதியில் இப்படி ஒரு வெண்பா:-

'' ஓத்தின்பொருள முடிவும் இத்தனையே உத்தமன்பேர்
ஏத்தும் திறம அறிமின் ஏழைகாள — ஓத(து)அதனை
வல்லீரேல நன்(று) அதனை மாட்டீரேல மாதவனபேர
சொல்லுவதே ஓத்தின் சுருககு ''

வேதங்களுக்கெல்லாம் சுருக்கு வழி நாம ஜபம், மறைகள் இறுதியில் கொண்டு சென்று முடிப்பது இறைவனின் திருப்பேரிலேயே ('உத்தமன பேர்' பாடத்தான் ஆணடாளும் எழுப்பு வாள் துயிலும் தோழியரை) புருஷோத்தமனின் பெருமை பேசும் வேததததை அறிய இயலாவிடின், ஒன்றும் குடி முழுகிப போய்விடாது. மாதவன் பேர் சொல்லுதலே மறைகள் அனைத திற்கும் சாரம என்பதை உணர்நதால், நன்று ஒரே பாட்டில், உத்தமன் பேர் - மாதவன் பேர் என்று இரண்டு பெயர்களை அடுத்தடுத்து எடுத்துத் தருகிறுர் ஆழ்வார். இவ்வளவெல்லாம பெருமை பெற்றதும், எளிமை மிக்கதுமான நாமத்தை மறந்தோரைச் சாடுவது இரண்டாமதிருவந்தாதியில் இன்னெரு பாசுரம்.

'' சிறந்தார்க(கு) எழுதுணையாம செங்கண் மால நாமம
மறந்தாரை மானிடமா வையேன - அறந்தாஙகும
மாதவனே'என்னும் மனம படைத்து மறறவன்பேர
ஓதுவதே நாவினுல உள்ளு. ''

நல்லோர்க்கும் பெரியோர்க்குமே உற்ற துணையான, செந்தாமரைக் கண்ணனின் திருநாமத்தை மறந்தவர்களை மனித சாதியிலேயே சேர்க்கமாட்டேன. உலகத்தில் தர்மம் செழிக்குமாறு செய்வது அம்மாதவனே என்று உணர்ந்து, அதே எண்ணத் தோடு அவனுடைய நாமத்தை நாவால் ஓதிக்கொண்டிரு — இது பாட்டின் பொருள்.

ஓதுதல் என்ற சொல சென்ற பாட்டில் வேதத்திற்கு வந்தது; இங்கு இறைவனின் திருநாமத்திற்கு வருகிறது. அழகிய, பொருள் பொதிந்த பணி அச்சொல்லுக்கு!

இவ்வளவெல்லாம் பெருமை பேசாது, நாமம நவிலுதலைத் தாழமையோடு, தன்னடக்கத்தோடு பேசும இடம் திருவிருததத்தில் ஒன்று உண்டு. தலைவி இறைவனின் திருநாமம் செப்பிக் காலம் தள்ளுதலைத் தோழிக்கு உணர்த்துகிற பாவம்.

''இருக்கார் மொழியால் நெறி இழுக்காமை உலகளநத
திருததாளிணை நிலத்தேவா வணங்குவா யாமும் அவர்
ஒருககாவினையொடும எம்மொடும நொந்துகனியினமையின
கருககாய் கடிபபவர்போல திருநாமசசொல் கறறனமே.''

இங்கு விளைந்த பழம் கிடைக்கமாட்டாது, இளம் பிஞ்சைத தின்பதாக நாயகி கூறுகிறாள். இருக்குவேத மநதிரங்களைக் கொணடு உலகளந்த உத்தமனுடைய திருவடிகளைப போற்றிப் பணியுமபூலோகத்து அமரர்களாகிய வேதியாகளைப்போல் அலலாது, ஆசையினால் உந்தப்பட்டு, பாவச் செயல்கள் புரிநததமையை எணணி மனம் ஒரு புறம் நோவ, நாமங்களாகிய சொறகளைக் கூறி வருகிறோம் என்பாள். திருநாமம் ஓதுதல் எளிய வழி எனபதே கருத்து.

நாமம் என்றால், ஒன்றா? இரணடா?

திருமாலுக்குப் பெயரே ஆயிரம் பேர்த்தேவன் என்பதாகச் சூட்டுவார் பெரியாழ்வாா

''காறை பூணும் கண்ணாடி காணும் தன்கையில வளைகுலுக்கும்
கூறை உடுக்கும அயர்ககும் தன் கொவவைச் செவ்வாய் திருத்தும்
தேறித்தேறி நின்று ஆயிரம் பேர்ததேவன் திறம பிதற்றும்
மாறில மாமணிவணணன் மேல இவள் மாலுறுகின்றாளே''

பெரியாழ்வார் தம பெண்ணின் சேஷ்டைகளை — அங்க அலங்காராதிகளை வெகுவாக வாணித்துக் கடைசியில், ஆயிரம் பேர் படைத்த பகவானின் பெருமைகளைப பாடிக் கொண்டே அந்நீல மாமணிவண்ணன் மீது மையல கொணடு இருக்கிறாளே எனப் பாடுகிறார் இஙகே மாலுறுகின்றாளே என்பது அழகிய பேச்சு. மால் எனில் திருமால், மயக்கம் இரண்டுமாம். இறுதியில் அவள் உண்மையிலேயே மாலுறுவாள் = திருமாலுடன ஐககியம் ஆவாள்; அவரையே அடையப் பெறுவாள். எப்படி? ஆயிரம் பேர்த் தேவன் திறம் பிதற்றிப் பிதற்றியே!

திருமங்கை மன்னன் அருளிச் செய்த பெரிய திருமொழியில் ஆயிரம் பேரைப் பற்றிய தொரு பேச்சு,—

"பாரும்நீர் எரி காற்றினோடு ஆகாசமும் இவையாயினான்
பேரும் ஆயிரம் பேச நின்ற பிறப்பிலி பெருகுமிடம்
காரும் வார் பனி நீள் விசும்பிடைச் சோருமாமுகில் தோய்தரச்
சேரும்வார்பொழில சூழஎழில் திருவேங்கடம் அடைநெஞ்சமே."

ஆழ்வார் முன் இரண்டு வரிகளில் எம்பெருமானின் பெருமை பேசுகிறார். ஐந்து பூதங்களுமாக இருந்து பிரபஞ்சத்திற்கு வடிவம் தருவது இறைவனே பிறப்பிற்கு அப்பால் உள்ள அவருடைய திருநாமங்கள் ஆயிரமாகும். அவருடைய உறைவிடமாகிய கார் முகிலும எழில் பொழிலகளும் நிறைநத திருவேங்கடத்தை நாடிச் செல்வாயாக என்று நெஞ்சததிற்குக் கூறுவது இப்பாசுரம் பேசப் பேர் ஆயிரம் படைத்தவர் பரமன.

பெரிய திருமொழியின் கண் முதல் பத்து, எட்டாம் திருமொழியில் இது ஏழாம் பாசுரம் அடுத்தாற்போல், ஒனபதாம் பாசுரம் நமக்கு எட்டெழுத்தை நினைவூட்டும்.

"பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் சொலலி நின்று பினனரும்
பேசுவார் தமை உயய வாஙகிப் பிறபபறுக்கும் பிரானிடம்
வாசமா மலர்நாறுவார் பொழில சூழ்தரும் உலகுக்கெலாம்
தேசமாயத் திகழும் மலைத் திருவேங்கடம அடை நெஞ்சமே."

இங்கும், பின் இரு வரிகள் பழைய பல்லவிதான்: முன் இரு வரிகள் ஓம் நமோ நாராயணாய என்ற அஷ்டாட்சர மந்திரத்தை ஓதி உய்யுமாறு உபதேசிப்பவை. ஓதுமின் என்று கூடச் சொல்லவில்லை; பேசுமின் என்பதுதான் ஆழ்வார் வாக்கு. மீட்டும் மீட்டும் கூறக் கூடவேண்டாம். ஒருமுறை கூறி நின்ற பின்பும், கூறியவரை உய்விக்கவல்ல மாமந்திரம் அது; பிறவித் தளையைஅறுத்துக் காக்கும், எம்பெருமானின் திருமலையைச் சென்றடைய அவன் பேரைச் சொல்லுமாறு நெஞ்சத்தினிடம் கூறுகிறார் ஆழ்வார்.

ஏன் இவவண்ணம் பாடுகிறா எனில்:—

பெரிய திருமொழியின் முதற் பாசுரம் காரணம் பகரும்.

"வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில பிறநது

கூடினேன கூடி இளையவர் தம்மோடு
அவாதரும கலவியே கருதி
ஓடினேன ஓடி உயவதோா பொருளால்
உணாவெனும பெரும பதம தெரிநது
நாடினேன நாடி நான கணடு கொணடேன
நாராயணா எனனுமை நாமம ''

இபபாசுரம் திருமங்கை மனனன் பகவானிடமிருந்து பகவத் ஞானத்தை நேரிடையாகப் பெற்று அவரிடமிருந்தே நாராயண மந்திரத்தை உபதேசிககப பெற்று, ஞானம அடைந்தபின் அருளியது. கடைததேறுதற்கு ஒரே சாதனம் நாராயண நாமம என்று அறுதியிட்டுக கூறுவது, ஞானத் தெளிவின் விளைவாம் அடுத்தோரு பாசுரம உய்ய நான் கணடு கொண்டேன் நாராயணா எனனும் நாமம என முடியும்

வெறும் மோட்ச சாதனமாக மட்டும நாராயணத் திருநாமத்தினைக் கூறின, இவவுலக வாழ்வினுக்கு அது பயன் தருவதலலவோ? இவ்வாறு எவரும் எணணலாகாது எனறே என்னவோ, ஆழவார் இவவுலகியல வாழவிலும் செழிப்பும் செமமையுமாகச் சிறந்து விளங்க நாராயண நாமத்தை எடுத்தியம்புகிறார் ஆயினும், வெறும புவியியல் சிறப்புகளை மட்டும் கூறி நாமத்தின் பெருமையை மட்டுப் படுத்தாது, இக பரவாழ்வுகளில் நாராயண நாமம் அளிககும மேனமைகளை மாறி மாறிப் பட்டியலாக விவரிககிறார்

'' குலம் தரும் செலவம தந்திடும்
அடியார் படுதுயர் ஆயின எலலாம
நிலந்தரஞ் செயயும நீள் விசும்(பு) அருளும
அருளொடு பெருநிலம் அளிககும
வலந்தரும் மறறுந் தநதிடும்
பெற்றதாயினும ஆயினசெயயும்
நலநதருஞ் சொலலை நான கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம. ''

உயர்குலத்தைத் தரும், பொருளைக் கொடுக்கும், பக்தர் படுதுயரினைத் தரையோடு தரையாக்கி விடும; வைகுண்டம் அளிக்கும்; பெரும் பதவி ாட்டித்தரும் என்றெல்லாம கூறி, மற்றெல்

லாம் தந்திடும் என்று எதையும் விட்டு வைத்திராது ஆழ்வார் மொழிவது, பொருளை வேண்டியும் பதவியை நாடியும் பக்தி செய்யும பெரும்பாலோர்க்கு உகந்த உபாயம் தான்! பெற்ற தாயினும்விட நலன்கள் வழங்கியருள்வது நாராயணத் திரு நாமம். அதை நலம் தரும் சொல் என்று முடிக்கிறார்.

இவ்வாறு பரமன் பெயர் பாடி உய்யச் சொன்னது ஊருக்கு உபதேசம் என்று எவரும் எண்ணி விடவேண்டாம். நானே இத் திருநாமம் நவின்று தான் நன்றாக உள்ளேன். நம்மைச் சேர்நத வர்களும் நாராயணன் பெயர் சொல்லி வாழவார்களாக - இப் படி ஒரு பாசுரம் ஆழ்வார் மனத்தை வெளியிடுகிறது.

"கானஎண்கும் குரஙகும் முசுவும படையா அடல் அரககர்
மானம் அழிதது நின்றவென்றி அமமான் எனககென்றும்
தேனும் பாலும அமுதும் ஆய திருமால் திருநாமம்
நானும் சொன்னேன நமரும உரைமின நமோ நாராயணமே."

கானகத்துக் கரடி, வானரப் படைகளைக் கொண்டு திமிர் நிறைந்த அரக்கரின் கொட்டத்தை அடக்கிய அவதாரக் காரி யம் இங்கே பேசப்படுகிறது எனக்கு எனறும் தேனும் பாலும் அமுதமுமாய் உள்ள பரந்தாமனின் திருநாமத்தை நான் கூறி னேன்; நம்மனோர்களும் நமோ நாராயணாய என நவினறு நன்றாக வாழ்வார்களாக என்று பாடுகிறா.

இறைவனின் இனிய பெயரை விடாது கூறுவோரையே ஏற்றிப் பாடும் பாசுரம் ஒனறு, திருமங்கை யாழ்வார் அருளி யுள்ளார். திருச்சேறை எனும் திருப்பதியில் எழுந்தருளியிருக் கும் எம்பெருமானின் விஷயமாக எழுந்த பாடல் அது.

"தண்சேறை எம்பெருமான் உம்பா ஆளும்
பேராளன் பேர் ஓதும பெரியோரை
ஒருகாலும் பிரிகிலேனே."

இம்மூவர்களில் ஆழ்வார், குளிர்ச்சி மிகு தலமாகிய திருச் சேறையில் எழுநதருளியுளள எம்பெருமான் - மூவுலகினையும் ஆளும் பெருமாள் - திருநாமத்தை ஓதும் சான்றோரைத் தம் மால் ஒரு போதும் விட்டுச் செல்ல மனம் வராது என்கிறார். பேராளன் பேர் ஓதுவார்க்கு அதனாலேயே பெருமை உண்டா

கிறது. பரமன் பெயரைச் சொல்வோர் 'பெரியோர்' ஆகி விடுகிறாகள் எப்படி? பேராளன் பெயரையன்றோ ஓதுகிறார்கள்? சாமானியனின் பெயரல்லவே? இவ்வாறு ஓதுவார்க்குப் பெருமை தரும் பெருமாள் பெயர் அது!

நாராயணா என்ற பெயரோ உள்ளது; அதைக் கூறுவதற்காகவே வாயில் நாக்கு என்ற உறுப்பும் அமைந்துள்ளது. பரகதிக்கு எளிய வழி இவ்வாறு அமைந்துள்ளபோது, எப்படித்தான் மககள் கெட்டலைகிறார்களோ என வேதனையுடன் வியப்புத் தெரிவிப்பது முதல் திரு அந்தாதிப் பாசுரம் ஒன்று

'' நாவாயில் உண்டே நமோ நாரணா என்று
ஓவாது உரைக்கும் உரை உண்டே – மூவாத
மாக்கதிக கண் செல்லும் வகை உண்டே என் ஒருவர்
தீக்கதிக் கண் செல்லும் திறம்? ''

நாமம் நவிலத்தான் நா உள்ளது. நாக்கு ஓதுவதற்காகத்தான் நாராயண நாமமும் இருக்கிறது என்றாற்போல், இரண்டையும் பின்னிப் பிணைத்துப் பாடும் ஆழ்வார், மோட்சத்திற்கு எளிய உபாயம் என்று நாமம் நவிலச் சொல்கிறார். அவர்க்குத் திகைப்பு என்னவென்றால், உய்வதற்குத் தான் இவ்வளவு எளிய வழி உள்ளது. மனிதன் நாசமடைய வழியே இல்லையே, பின், எவ்வாறு மனிதன் தீய வழி சென்று அழிகிறான்?

அவர் இவ்வண்ணம் கேட்பதில் அதிசயம் இல்லை. எப்போதும் திருமாலை நெஞ்சில் இருத்தி, நாராயணா என்னும் நாமத்தை நாவால் ஓதிக்கொண்டிருப்பவர்க்குத் தீய வழி இருப்பதாய்த் தான் தோன்றக் கூடுமோ? அதனால்தான் அவர் இளங்கோ காலத்து ஆய்ச்சியர் போல்,

'' நாராயணா என்னா நா வென்ன நாவே என்று கேட்கிறார்! ''



# அறிவிப்பு

---

## உற்சவங்கள்

| | | | |
|---|---|---|---|
| கல்யாண உற்சவம் | .. | ரூ | 700—00 |
| ஸஹஸ்ரகலசாபிஷேகம் | . | ரூ. | 1500—00 |
| திருப்பாவாடை | . | ரூ. | 2250—00 |
| கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் | .. | ரூ. | 1745—00 |

## பிரஸாதம்

| | | | |
|---|---|---|---|
| தத்யோதனம | 35-00 | லட்டு | 300-00 |
| புளியோதரை | 50-00 | வடை | 130-00 |
| பொங்கல் | 60-00 | போளி | 110-00 |
| சர்க்கரை பொங்கல் | 75-00 | தேன்துளே | 115-00 |
| சர்க்கரை பாத் | 70-00 | அப்பம் | 85-00 |
| கேசரி பாத் | 80-00 | சுகி | 70-00 |
| ஜீரா | 170-00 | ஜிலேபி | 225-00 |
| பாயாசம் | 100-00 | தோசை | 65-00 |

எம் சந்திரமௌளி ரெட்டி,
எம். ஏ. ஐ. ஏ. எஸ்
எக்ஸிக்கியூடிக் ஆபிஸர்,
திருமலே - திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி.



# முக்கவி கண்ட காப்பியம்

—: ஸ்ரீ. T. G. அனந்த சுப்ரமண்யம். :—

(காபேயன்)

## அயோத்யா காண்டம்

★ ★ ★

(முனதொடா)

"सत्य मूल सबसुकृत सहाये
बेदपुरान बिदित मनु गाये ॥
तेहि पर राम-सपथ करि आई ।
सुकृत सनेह अवधि रघुराई ॥" என்று

பத்ம புராணத்தில்.

"उक्त्वानृत भवेत् यत्र प्राणिनां प्राणरक्षणम् ।
अनृतं तत्र सत्यं स्यात् सत्यमप्यनृतं भवेत् ॥"

அதாவது எப்பொழுது பொய்யைச் சொல்லி பிராணத்தைக் காப்பாற்றிக் கொள்ள நினைககிறுேனே, அப்பொழுதே அதே பொய்யானது உணமையாக மாறிவிடுகிறது அதே போல் ஸத்யமும், அஸத்யமாக மாறிவிடுகிறது எனறு கூறப் பட்டுள்ளது

அன்று தசரதன சம்பராஸுர யுத்தத்தில் விளையாட்டாகக் கூறியது இன்று வினையாகி விட்டது.

இம்மாதிரி தசரதன் சொன்னதைக கேட்ட கைகேயி வேந்தே! முப்பத்து முக்கோடி தேவதைகள், சூரிய சந்த்ரர் கள், அஷ்டதிக்பாலர்கள், முதலான தேவதைகள சாக்ஷி யாகக் கொண்டு தேவாஸுர (சம்பராஸுர) யுததத்தில் தஙக ளுக்கு உதவி செய்ததற்காக இரணடு வரங்கள் தருவதாகக் கூறினீர்களே! அது ஞாபகமிருககிறதா? அந்த இரணடு வரங் களைத்தான் இப்பொழுது தங்களிடம் கேடகிறேன்.

"अभिषेकसमारम्भे राघवस्योपकल्पितः ।
अनेनैवाभिषेकेन भरतो मेऽभिषिच्यताम् ॥"
यो द्वितीयो वरो देव दत्तः प्रीतेन मे त्वया ।
तदा देवासुरे युद्धे तस्य कालोऽयमागतः ॥
नव पञ्च च वर्षाणि दण्डकारण्यमाश्रितः ।
चीराजिनजटाधारी रामो भवतु तापसः ॥
भरतो भरतामद्य यौवराज्यमकण्टकम् ॥"

அரசே! ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடாகச் செய்தனவற்றையெல்லாம் என் மகன பரதனுக்குச் செய்யவும், ராமனுக்குச் செய்ய விருக்கும் நேரத்தில் பரதனுக்கு முடி சூட்டவும், அதே மாதிரி இரண்டாவது வரமாக ராமன் காட்டிற்குச் செல்லவேணடும் எனபதாகும்

அங்கு பதினன்கு ஆண்டுகள், மரவுரியும், மான் தோலையும் தரித்தும், ஜடைகளைப் போட்டுக கொண்டும் முனிவா கோலத்தில் வசிக்கவேணடும - என்றும் கேட்டாள்.

இங்கு வால்மீகம் ராமனைக் காட்டிற்கு அனுப்பவேண்டுமென்று கூறுகிறது. கம்பர்; "சீதைகேள்வன்" என்று கூறுகிருர். ராமன் காட்டை ஆளவேண்டுமெனபது தான் முக்கியம என்று கம்பர், வால்மீகம் ராமனுடைய வேஷத்தையும் குறிக்கிறது. ஏனெனில் அங்கு சென்று ராமன் ஓர் புது ராஜ்யத்தை அமைத்துக் கொண்டு விடுவானே என்று எண்ணி கைகேயி "चीराजिनजटाधारी" என்று கேடகிருள். மேலும் பதினங்கு ஆண்டுகள் என்று பெரிய எண்ணைக் கூறிவிட்டால் தசரதன் பயப்படப் போகிருன் எனறஎண்ணத்தால் கைகேயி "नव+पञ्च वर्षाणि" என்று; அதாவது ஒன்பதும்+ஐந்தும் வர்ஷங்கள் என்று இதுதான் பெண்களின் சாமர்த்யம்!

கம்பரோவெனில சாதாரணமாக பதினங்கு ஆண்டுகள் என்றே கூறிவிட்டார்.

அத்யாத்ம ராமயணத்தில் வரம் கேட்ட விபரம் வால்மீகத்தோடு ஒட்டி இருந்தாலும் ஓா விசேஷம்.

"मुनिवेषधरः श्रीमान् जटावल्कलभूषणः ।
चतुर्दशसमास्तत्र कन्दमूलफलाशनः ॥
पुनरायान्तु तस्यान्ते वने वा तिष्ठतु स्वयम् ।"

ராமன், ஜடை, மரவுரி இவைகளை அணிந்து கொண்டு கிழங்கு, வேர், இவைகளை உண்டு பதினான்கு ஆண்டுகள் காட்டில் கழிக்கட்டும், பதினான்கு ஆண்டுகள் முடிந்த பிறகு இஷ்டமிருந்தால் வரட்டும், இல்லாவிடில் அங்கேயே தங்கி இருக்கட்டும் என்று கூறுகிறது. இந்த விஷயம் வால்மீகத்தோடு வேறுபட்டதாகும்.

துளஸிதாஸரும் வால்மீகத்தையே பின்பற்றிச் செல்லுகிறார்.

"तापस वेष बिशेषि उदासी ।
चौदह बरिस रामु बन बासी ॥"

பதினான்கு ஆண்டுகள் என்பதால் பரதனிடத்தில் மக்களுக்கு நல்ல பற்று ஏற்பட்டுவிடும். மேலும் ராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாஸத்தில பிழைத்து இருந்து வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்பது மந்தரையின் கணக்கு இதைக் கொண்டுதான் பதினான்கு ஆண்டுகள் தீபாந்தர சிக்ஷைக் கொடுக்கப் பட்டுவந்தது.

இவ்விதம் கைகேயி வரங்களைக் கேட்டவுடன் தசரதன் மூர்ச்சையாகி பின் மூர்ச்சைத் தெளிந்து பலவாறாக மன்றாடுகிறான். எதற்கும் அவள் இசைந்து கொடுக்கவில்லை கைகேயின் காலில் விழுந்து விட்டான் என்று கம்பர் கூறுகிறார்.

" காலமேல் வீழ்ந்தான்; கந்துகொல்
யானைக் கனி மன்னர் " என்று

வால்மீகம்.—

"अञ्जलिं कुर्मि कैकेयि पादौ चापि स्पृशामि ते"

என்று கூறுகிறது.

அத்யாத்மராமாயணத்தில் கூறியபடி வேறு எந்த ராமாயணத்திலும காணபபடவில்லை

கைகேயி வரஙகளை உடனே நிறைவேற்ற வேண்டுமெ என்று ராமன் இருக்கும் மாளிகைக்கு வேலையாட்களை அனுப்பினுள். இவ்விஷயம் நடந்தது இரவு வேளை. காலையில் ஸ்துதி பாடகர்கள் பாட, தசரதன் விழித்துக் கொண்டு மநதிரியான ஸுமநதிரரை அழைத்து ராமனைக் கூட்டி வாருங்கள் என்று கட்டளையிட்டார். ஸுமந்திரர் ராமனின் மாளிகைக்குச் செல் லும்பொழுது எங்கு பார்த்தாலும் ராமனின் முடிசூட்டு விழாக கோலம் காணப்படுகிறது. ராமனைப் பார்ப்பதற்காகப் பெரி யோர்களும், முனிவர்களும், பண்டிதர்களும், பாமரர்களும் நகரம் முழுவதும் அதிகாலையிலிருநது கூடி விட்டார்கள். இவவிஞோதங்களை யெல்லாம் பார்த்த வணணம் ஸுமந்திரர் ராமனின மாளிகையை அடைந்தார்.

"कौसल्या सुप्रजा राम पिता त्वं द्रष्टुमिच्छति ।
महिष्यापि हि कैकेय्या गम्यतां तत्र मा चिरम् ॥"

''கௌஸல்யை பெற்றெடுத்த ராமா! உன்னை தகப்பஞர் பார்க்க விரும்புகிருர். அத்தோடு அங்கே பட்ட மகிஷியான கைகேயியும் கூட இருக்கிருள், தாமதமின்றி வா'' எனருர்.

அவ்வமயம் ஸீதையுடன ராமன பேசிக்கொண்டிருக கிருன். ஸுமந்திரரரின் வார்த்தையைக் கேட்ட ராமன்,

"देवि ! देवश्च देवी च समागम्य मदन्तरे ।
मन्त्रयेते ध्रुवं किञ्चिदभिषेचनसंहितम् ॥"

''தேவி! ஸீதே! தநதையும், தாயும் என் சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருக்கிருர்களாம, அதாவது பட்டாபிஷேக விஷயமாகத்தான் இருக்கும் - என நினைக்கிறேன்'' என்ருர். இதிலிருந்து ராமனுக்குப் பட்டாபிஷேக விஷயமாக ஏதோ ஒரு மாற்றம் இருகக வேணடுமென நினைககிருர். ஏனெனில் கை-கேயியின்மாளிகையில் தகப்பஞர் தனனைக் கூப்பிட்டு அனுப்பி யுள்ளார் என்று கூறும் பொழுதே ஏதோ இருக்கிறது என்பதை ராமன் அறிவான்

(தொடரும்)

ஶ்ரீ:

# தைத்திரீய ஆரண்யகம்

## तैत्तरीयारण्यकम् ॥

### (ஸூரிய நமஸ்காரம்)

—: வித்துவான் ஸ்ரீ. நடாதூர். தேசிகாச்சாரி. :—

★ ★ ★

(முன்தொடர்)

அநுவாகம் - 5

१. अतिताम्राणि वासाँसि । अष्टिवज्रिशतघ्नि च ।
विश्वे देवा विप्रहरन्ति । अग्निजिह्वा असश्चत ॥

அதிதாம்ராணி வாஸாம்ஸி| அஷ்டிவஜ்ரி சதக்னி ச|
விஸ்வே தேவ விப்ரஹரந்தி| அக்னிஜிஹ்வா அஸஸ்சத ||க||

### பின்பனிக்காலத்தில் விஸ்வேதேவர்கள்

வாஸாம்ஸி — சிசிரம் என்கிற பினபனிக்காலத்தில் சூரிய கிரணத்துடன் சஞ்சாரம் செய்யும் ''விச்வேதேவர்கள்'' என்பவர்களுடைய ஆடைகள், அதிதாம்ராணி — மிகவும் சிவந்தவைகளாக உள்ளன. விச்வேதேவா: — விச்வேதேவர்கள், அஷ்டிவஜ்ரி — சதக்னி ச — அஷ்டிவஜ்ரி சதக்னி என்கிற ஆயுதங்களால், விப்ரஹரந்தி — பகைவர்களை அடித்துக்கொள்கின்றனர். அக்னிஜிஹ்வா: — நெருப்பை நாக்காகக் கொண்ட அந்த தேவர்கள், அஸஸ்சத — வெற்றி பெற்று வீரமுழக்கம் செய்கின்றனர்.

२. नैव देवो न मर्त्यः । न राजा वरुणो विभुः ।
नाग्निर्नेन्द्रो न पवमानः । मातृक्कच्चन विद्यते ॥

நைவதேவோ ந மர்த்ய: ந ராஜா வருணோ விபு:|
நாக்னிர்நேந்த்ரோ நபவமான:| மாத்ருக்கச்சன விதயதே ||உ||

### விசுவேதேவர்களின் வீர முழக்கம்

கச்சன தேவ: — தேவவகுப்பைச் சேர்ந்த எவரும், மாத்ருக் — எங்களுககு நிகராக, ந ஏவ வித்யதே — இல்லவே

இல்லை நமர்த்ய: — மனித வகுப்பைச் சேர்ந்த எவரும் எங்களுக்கு நிகராக இல்லை விபு: — சாமர்த்திய முள்ளவனும், ராஜா — ஜலத்திற்கு அதிபதியுமான, வருண: ந — வருணனும் எங்களுக்கு நிகராக இல்லை ந அக்னி: ந இந்தர:, ந பவமான: — அக்கினியும் இந்த்ரனும் வாயுவும்கூட எங்களுக்கு நிகராக இல்லை

சிசிரம் என்கிற பின்பனிக் காலத்தில், சூரியனுடன் சஞ்சாரம் செய்யும் விசுவேதேவாகள், மிகவும் சிவந்த ஆடையை தரித்துககொண்டிருக்கின்றனர். அவர்கள் இநதக் காலத்தில் தான், அஷ்டிவஜ்ரி சதக்கினி (நூறு போகளைக் கொல்லும் ஆயுதம்) முதலிய ஆயுதங்களை ஏநதி பகைவர்களை அழிக்கின்றனா. அக்கினியின் முகமாகவே மனிதர்கள் கொடுக்கின்ற ஹவிாபாகங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். பகைவர்களை வென்ற பொழுது மிகுந்த உற்சாகத்துடன் தேவனே, மனிதனே, ஜலாதிபதியான வருணனே, அக்கினியோ, இநதிரனே, வாயுவோ, தங்களுக்கு நிகர் இல்லை என்று வீர முழக்கம் செய்கின்றனர். இக்காலத்தில், ஒரு காரியத்தில் ஸித்தியை விரும்புகிறவர்கள் அக்கினியில் ஹோமம் செய்து அதன் மூலமாக விசுவேதேவர்களை உபாசிக்கவேண்டும் என்று அறியப்படுகிறது.

६. दिव्यसैकाधनुरार्त्निः । पृथिव्यामपरा श्रिता ।
तस्येन्द्रो वम्रिरूपेण । धनुर्ज्यामच्छिनत्स्वयम् ।।

திவ்யஸ்யைகா தனுரார்த்னி:| பருதிவ்யாம் அபரா ச்ரிதா|
தஸ்யேந்த்ரோ வம்ரிரூபேண| தனுா ஜ்யாமச்சினத் ஸ்வயம்||கூ||

அஸ்ய — இந்த விஸ்வேதேவர்களுடைய, ஏகா — ஒரு, தனுரார்த்னி: — வில்லின் கோடியானது, திவி—மேல்உலகததை, ச்ரிதா — அடைந்துள்ளது, அபரா — வேறு கோடியானது (நுனியானது, ப்ருதிவ்யாம் — பூமியை, ச்ரிதா — அடைந்து இருக்கிறது. இந்த்ரா: — இந்திரன், ஸ்வயம் — தானே, வம்ரிரூபேண — கரையான் உருவத்தில், தஸ்ய — அந்த விஸ்வேதேவர்களின், தனுர்ஜ்யாம — வில்லின் ஞாண்கயிற்றை, அச்சினத்—அறுத்தார்.

விஸவேதேவர்களின் மஹிமை பொருந்திய வில்லின் ஒரு முனை மேல் உலகத்தையும் மற்றொருமுனை பூமியையும் தொட்டி

ருந்தது. இவ்வளவு பெரிய வில்லைக்கண்டு அஞ்சின இந்திரன் தானே கரையான் உருவமெடுத்து அந்த வில்லில் கட்டியிருந்த ஞாண் கயிற்றை அறுத்து விட்டார்.

४. तदिन्द्रधनुरित्यज्यम् । अभ्रवर्णेषु चक्षते ।
एतदेव शंयोर्बार्हस्पत्यस्य । एतद्रुद्रस्य धनुः ।।

தஇ்நத்ர தனுரிதயஜயம| அபரவர்ணேஷு சக்ஷதே|
ஏததேவ சமயோ: பாரஹஸபதயஸய| ஏதத்ருத்ரஸ்ய தனு: ||ச||

தத் - அந்த வில்லின் வடிவத்தை, அப்ரவர்ணேஷு - மேகங்களில் விழுந்த சூரியகிரணங்களில் கண்டு, அஜ்யம் — ஞாண்கயிறு இல்லாத, இந்திரதனு — தேவேந்திரனின் வில், இதி சக்ஷதே — என்று அறிவாளிகள் கூறுகின்றனர். ஏததேவ — இதே வில்தான், பார்ஹஸபத்யஸய — பிருஹஸபதியின் புத்திரரான, சம்யோ — சம்யு என்பவருடையதாகவும் இருந்தது ஏததேவ — இதே வில்தான், ருத்ரஸ்ய — சிவபெருமானின வில்லாகவும் இருந்தது.

மேகங்களிலிருநது சிறு துளிகள் விழும்பொழுது, அவைகளின் மேல் சூரியகிரணங்கள் பட்டால் பல நிறமுள்ள வில்லு போல் ஒரு உருவம தெரியும அதை ''வானவில்'' என்று ஜனங்கள் கூறுவார்கள் இநத வானவில்லுககுச் சமானமாகவே இந்திரனுல் ஞாண அறுக்கப்பட்ட விஸ்வேதேவர்களின் வில்லும் இருந்தது. அதுவே ''இந்திரனுடைய வில்'' என்றும் கூறப்படுகிறது. விஸ்வேதேவாகளின் வில்லினுலேயே பிருஹஸ்பதியின் புத்திரனுன சம்யு என்பவரும தனது வீர காரியங்களை சாதித்துக் கொண்டிருக்கிருர். இதே வில்லினுல்தான் சிவபெருமானும் பகைவர்களை அழித்து வெற்றி பெற்று இருக்கிருர். அத்தகையமஹிமை பொருந்தியது விஸ்வேதேவர்களின் வில்லு.

## பிராம்மண வாக்கியங்கள்

५. रुद्रस्य त्वेव धनुरार्त्निः । शिर उत्पिपेष ।
स प्रवर्ग्योऽभवत् । तस्माद्यः सप्रवर्ग्येण ।।
यज्ञेन यजते । रुद्रस्य स शिरः प्रतिदधाति ।
नैनं रुद्र आरुको भवति । य एवं वेद ।।

ருத்ரஸ்ய த்வேவ தனுரார்த்னி:| சிர உத்பிபேஷ|
ஸப்ரவர்கயோ அபவத்| தஸ்மாத்ய: ஸப்ரவர்க்யேண
யஜ்ஞேன யஜதே| ருத்ரஸ்யஸசிர: பரதிததாதி|
நைநம் ருத்ர ஆருகோ பவதி| ய ஏவம் வேத ||ரு||

தனுராார்த்னிः — இந்திரனல், ஞாணகயிறு அறுக்கப்பட்ட வில்லின் மேல் நுனியானது, ருத்ரஸ்ய துஏவ-ருத்திரனுடையவே, சிரः — தலையை, உத்பிபேஷ — மேலே தள்ளிப் பொடியாக்கியது. ஸः — அந்தத்தலை, ப்ரவர்க்யः — பிரவர்கியம் என்கிற யாகத்தின் ஒரு அங்கமாக, அபவத் — உண்டாயிற்று, தஸ்மாத் — ஆகையால், யः — எவன், ஸப்ரவக்யேண — பிரவர்க்கியத்துடன் கூடின, யஜ்ஞேன — யாகத்தினுல, யஜதே — தேவதையை பூஜிப்பானே, ஸः — அவன், ருத்ரஸ்ய — ருத்திரனுடைய, சிரः — தலையை, ப்ரதிததாதி — ஒட்டவைக்கிறான். யः — எவன், ஏவம் — இவ் விதம், வேத — அறிகிறானே, ஏனம் — அவனை, ருத்ரः — ருந்திரன், ஆருகः — துன்புறுத்துபவனாக, ந பவதி — ஆவதில்லை.

ருத்திரன், விசவேதேவர்களின் மாபெரும் வில்லினல் பகைவர்களை அழித்தார். பிறகு அந்த வில்லின் ஞாண் கயிற்றை அவிழ்க்காமல் அதன் மேல் நுனியில் முகவாய்க் கட்டையை வைத்துக் கொண்டு அருகில் வருபவர்கள எல்லாரையும் பயமுருத்திக் கொணடிருந்தாா. அச்சமயத்தில்தான் இந்திரன் கரையான் உருவமெடுத்து ஞாண்கயிற்றை அறுத்தார். கெட்டியாகக் கட்டப்பட்டிருந்த ஞாண்கயிறு திடீரென்று அறுந்தவுடனே வில்லின மேல்நுனி வேகமாக மேலே நிமிர்ந்ததால், ருத்திரனுடைய தலை கீழே தளளப்பட்டு பொடியாகவும் ஆக்கப் பட்டது. அந்த ருத்திரனின் தலையே பிறகு ஜியோதிஷ்டோமம் என்கிற பெரிய யாகத்தின் அங்கமான "பிரவர்க்கியம்" என்கிற காரியமாயிற்று. ஆகவே எவன் பிரவாக்கியம் என்பதுடன் ஒரு யாகத்தைச் செய்கிறானே, அவன் ருத்திரனுடைய தலையை ஒட்டவைத்தவனாக ஆகிறான். அவனை ருத்திரன் துன்புறுத்துவதில்லை: நன்மையே செய்வார். எவன் பிரவர்க்கியத்தின் இந்த மஹிமையை அறிகிறானே அவனையும் ருத்திரன் துன்புறுத் தாமல் நன்மையே செய்வார்.

ஐந்தாவது அனுவாகம் முற்றிற்று.



EDITED AND PUBLISHED BY M CHANDRAMOULI REDDY, EXECUTIVE OFFICER TIRUMALA-TIRUPATI DEVASTHANAMS AND PRINTED AT T T D. PRESS, TIRUPATI

# PHOTO NEWS :

## AT BHIMAVA



The Annual Suprabhatham recitation competition was conducted by the T T D Information Centre, Bhimavaram (A P) The prize distribution to the winners of this competition was done at a simple function on 13–6–71 Sri G Ranga Raju, Chairman, T T D Board of Trustees, participated in the function Sri M Balamurali Krishna, the noted Sangitha Vidwan of Andhra Pradesh distributed the prizes to the winners of the competition The elite of the town attended gathering

